**இலங்கை பத்திரிகை பேரவையின் - 2022**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இலங்கை பத்திரிகை பேரவையின் ("பேரவை") 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தினதும், 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளினதும் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் பேரவையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, பேரவையின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது பேரவையை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் பேரவை தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

பேரவையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பேரவையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பேரவை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக சபையின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக சபையின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் பேரவையின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பேரவையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பேரவையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பேரவை செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

### 1.5 நிதிக்கூற்றுக்களின் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு மீதான உள்ளகக் கட்டுப்பாடு

முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட அங்கீகாரத்துடன் கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ளப்படுகின்றன என்றும் பொருத்தமான அறிக்கையிடல் நியமங்களிற்கிணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுவதை அனுமதிப்பதற்கும் சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பை பேணுவதற்கும் தேவையானவாறு கொடுக்கல் வாங்கல்கள் பதிவு செய்யப்படுகின்றன என்றும் முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம் மாத்திரமே சொத்துக்களை அணுகுவதற்கு அனுமதிக்கப்படுகின்றது என்றும் பதிவு செய்யப்பட்ட சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பு ஏற்கனவேயுள்ள சொத்துக்களுடன் நியாயமான கால இடைவெளிகளில் ஒப்பீடு செய்யப்படுகின்றன என்றும் ஏதாவது வேறுபாடுகள் தொடர்பாக பொருத்தமான நடவடிக்கை

எடுக்கப்படுகின்றது என்றும் நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதற்கு போதுமான உள்ளகக் கணக்கீட்டுக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை "திட்டமிட்டு பேணுதல்" நிறுவகத்திற்கு அவசியமாக உள்ளது.

### 1.5.2 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| உரிய நியமங்களின் தொடர்புடன் இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 07 இன் 47 ஆம் பந்தியின் பிரகாரம் மற்றும் சபையின் கணக்கீட்டு கொள்கையின் பிரகாரம் மோட்டார் வாகனங்கள் மீள்மதிப்பீடு செய்யப்பட்டு நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட வேண்டிய போதிலும், ரூபா 10,541,000 ஆன மோட்டார் வாகனங்களின் கிரயப் பெறுமதியை நிதிக்கூற்றுக்களில் காண்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | இந்த மோட்டார் வாகனங்களை மீள்மதிப்பீடு செய்து இந்த ஆண்டின் போது மேற்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்ததுடன், எதிர்காலத்தில் கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்குமாறு உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | கணக்கீட்டு நியமத்தின் பிராகரம் மீள்மதிப்பீடு செய்து கணக்குகளில் காண்பித்தல் வேண்டும். |

### 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2020 ஒக்டோபர் 13 ஆம் திகதிய 20/1468/340/002 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்தின் 16.46(i)(இ) பந்தி | உரிய அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் சபையின் தலைவருக்கு பல்கலைக்கழக விரிவுரையாளர் பதவிக்கு உரித்தான சம்பளம் மற்றும் படிகள் மாத்திரம் செலுத்த முடியுமாக இருக்கும் போது அமைச்சரவை தீர்மானத்திற்கு முரணாக தலைவர் பதவிக்கு உரித்தான 2022 ஆம் ஆண்டின் சம்பளமாக ரூபா 1,079,032 செலுத்தப்பட்டிருந்தது. | 2020 ஒக்டோபர் 13 ஆம் திகதிய பணிப்பாளர் சபை பத்திர இலக்கம் 20/1468/340/002 இல் அர்த்தம் காண்பிக்கப்பட்டுள்ள பிரகாரம் அந்த காலத்தில் முழுமையான படி செலுத்தப்பட்டிருந்ததுடன் முழுமையான படி செலுத்துதல் தொடர்பாக பொது முயற்சிகள் திணைக்களத்தில் வழங்கப்பட்ட பதில் கடிதத்தின் பிரகாரம் 50 சதவீத படியொன்று பணிப்பாளர் சபையின் தீர்மானத்தின் | அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | அடிப்படையில் செலுத்தப்பட்டிருந்தது. | |
| (ஆ) | 2010 மே 14 ஆம் திகதிய சீஏ/1/17/1 ஆம் இலக்க சனாதிபதி செயலக கடிதத்தின் 01 ஆம் பந்தி மற்றும் பொது முயற்சிகள் குழுவின் 2012 யூலை 10 ஆம் திகதிய 07 ஆம் இலக்க கட்டளை | சபை அரசாங்கத்தின் கட்டிடமொன்றில் நடாத்திச் செல்லப்பட வேண்டிய போதிலும், சபை ஆரம்பத்ததில் இருந்து 23 வருட கால அளவு வாடகைக்கு பெறப்பட்ட தனியார் கட்டிடங்களில் நடாத்திச் செல்லப்பட்டிருந்ததுடன், அதற்காக 2010 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டு வரை கட்டிட வாடகையாக ரூபா 33,794,800 செலவிடப்பட்டிருந்தது. | அரசாங்க துறையின் இடங்களுக்கு எடுத்துச் செல்வதற்கு முயற்சி எடுக்கப்பட்டிருந்ததுடன், அரசாங்கத்தின் கட்டிடமொன்றை பெற்றுக்கொள்ளல் தொடர்பாக அமைச்சுடனும் அவ்வப் போது கலந்துரையாடப்பட்டது. இது தொடர்பாக நகர அபிவிருத்தி அதிகார சபைக்கும், ஏனைய அரச துறைகளுக்கும் கடிதம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கை ஏற்பாடுகள் மற்றும் பொது முயற்சிகள் குழுவின் கட்டளையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | 1970 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 13(8) ஆம் பிரிவு | சட்டத்தின் 7 ஆவது உப பிரிவின் (ஏ) மற்றும் (பீ) பந்திகளின் பிரகாரம் சமர்ப்பிக்கப்படுகின்ற அறிக்கைகள் உரிய அரச கூட்டுத்தாபனத்தின் நிர்வாக சபையினால் கவனத்தில் கொள்ளப்படல் வேண்டும். அவ்வாறு கவனத்தில் கொள்ளப்பட்ட பின்னர் அந்த நிர்வாக சபையினால் கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்படுள்ள விடயங்கள் தொடர்பாக எடுப்பதற்கு உத்தேசித்த நடவடிக்கைகள், கணக்காய்வு அறிக்கை சபைக்கு சமர்ப்பிக்கப்பட்ட திகதியில் இருந்து மூன்று மாதங்களுக்குள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அறிவிக்க வேண்யிருந்த போதிலும், 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பதிலளிக்கப்படவில்லை. | சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 1,653,272 இலாபமாக இருந்ததுடன், அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் நட்டம் ரூபா 3,381,173 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 5,034,445 அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது. இந்த அதிகரிப்பிற்கு முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது அரசாங்க மானியம் 22 சதவீதத்தினால் அதிகரித்தமை, ஏனைய செலவினம் 21 சதவீத்தினால் குறைவடைந்தமை, மாற்றல் மற்றும் மானிய செலவினம் 42 சதவீத்தினால் குறைவடைந்தமை பிரதான காரணங்களாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 1973 இன் 5 ஆம் இலக்க இலங்கை பத்திரிகை பேரவை சட்டத்தின் 25 ஆவது பிரிவின் பிரகாரம் பத்திரிகைகளை பதிவு செய்தல் மற்றும் அவ்வாறு பதிவு செய்வதற்காக கட்டணத்தை அறவிடுவதற்கான கட்டளைகள் திருத்த வேண்டிய போதிலும், தொழில்நுட்ப விருத்தியுடன் ஈ-பத்திரிகை வெளியிடல் திட்டம் அபிவிருத்தி செய்யப்பட்டிருந்ததுடன், அந்த பத்திரிகைகளை பதிவு செய்தல் தொடர்பாக சட்டத்தின் ஏற்பாடுகளை திருத்துவதற்கு சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | 2021.01.12 ஆம் திகதிய அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் அமைச்சின் செயலாளரின் தலைமையில் இருதரப்பு குழுவொன்று நியமித்து அதன் மூலம் சட்டத்தை திருத்தும் செயற்பாடுகளை எதிர்காலத்தில் அமுல்படுத்துமாறு கூறப்பட்ட போதிலும், சபைக்கு கட்டுப்படுத்த முடியாத சில விடயங்களினால் இலத்திரனியல் மற்றும் புதிய ஊடகங்களுக்கும் உரிய பிரகாரம் சட்டத்தை மறுசீரமைத்து சபையின் மூலம் வரைவொன்றும் சமர்ப்பிக்கப்பட்டதன் பின்னர் தேவையான மீள்கட்டமைப்பு செயற்பாடுகளை மேற்கொள்ள முடியாதிருந்தது. அவ்வாறே 2022.12.20 ஆம் திகதிய அமைச்சரவை தீர்மானத்தின் மூலம் பத்திரிகைகள் பதிவு செய்தல் கட்டணத்தை அதிகரிப்பதற்கு உரிய சபையின் கோரிக்கையும் அமைச்சரவையின் மூலம் நிராகரிக்கப்பட்டிருந்தது. | பத்திரிகை பேரவை சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்ததுடன், e - பத்திரிகை பதிவுசெய்யும் தேவை மற்றும் வினைத்திறனை சரியாக மதிப்பிட்டு சட்டத்தின் ஏற்பாடுகளை திருத்துதல் வேண்டும். |

## 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பத்திரிகை பேரவை சட்டத்தின் 09 ஆவது பிரிவின் பிரகாரம் பத்திரிகைகளுக்கும் எழுத்தாளர்களுக்கும் எதிராக பொது மக்கள் மற்றும் பல்வேறு நிறுவனங்களினால் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாடுகள் சபையினால் அமுல்படுத்தப்படல் வேண்டும். மீளாய்வாண்டின் போது செய்திப்பத்திரிகைகளுக்கு எதிராக பொது மக்கள் மற்றும் பல்வேறு நிறுவனங்களால் மேற்கொள்ளப்பட்ட 34 முறைப்பாடுகள் மற்றும் 2021 ஆம் ஆண்டில் தீர்வு காணப்படாமல் முன்கொண்டுவரப்பட்ட 35 முறைப்பாடுகள் என்பவற்றை உள்ளடக்கிய மொத்த முறைப்பாடுகளின் எண்ணிக்கை 69 ஆக இருந்ததுடன், அந்த முறைப்பாடுகளில் 23 மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் விசாரணையில் காணப்பட்டது. | முறைப்பாடொன்று கிடைத்து 2 வாரங்களுக்குள் பரிதோசனைகளுக்காக கோரப்படல் வேண்டும். மேலும், 02 வாரங்களில் பிரமாணங்களின் பிரகாரம் பரிசோதனை ஆரம்பிக்கப்படுள்ளது. மேலும் பல்வேறு விடயங்களின் அடிப்படையில் பரிசோதனைகளை நீண்ட காலம் விசாரணை செய்ய வேண்டி ஏற்பட்டிருந்தது. ஒட்டுமொத்தமாக எடுப்போமாயின் பல்வேறு காரணங்கள் மற்றும் சபைக்கு கட்டுப்படுத்த முடியாத காரணங்களினால் பரிசோதனைகளில் தாமதம் ஏற்படக்கூடியதாக இருந்தது. | பத்திரிகை முறைப்பாடுகளுக்காக தீர்வு வழங்கும் நடவடிக்கைகளை விரைவுபடுத்துதல் வேண்டும். |
| (ஆ) | பத்திரிகை பேரவை சட்டத்தின் 30 ஆவது பிரிவின் பிரகாரம் பதிவு செய்யப்படாமல் சந்தைக்கு விநியோகிக்கப்படுகின்ற பத்திரிகைகள் தொடர்பாக தேவையான சட்டங்கள் மற்றும் கட்டளைகள் வழங்கப்பட்டிருக்கவில்லை. | 2021.01.12 ஆம் திகதிய அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் அமைச்சின் செயலாளரின் தலைமையில் இருதரப்பு குழுவொன்று நியமித்து அதன் மூலம் சட்டத்தை திருத்தும் செயற்பாடுகளை எதிர்காலத்தில் அமுல்படுத்துமாறு அறிவிக்கப்பட்டிருந்தது. இலத்திரனியல் மற்றும் புதிய ஊடகங்களுக்கு உரிய பிரகாரம் சட்டத்தை மறுசீரமைத்து சபையின் | பதிவு செய்யாமல் விற்பனை செய்யப்படுகின்ற பத்திரிகைகள் தொடர்பான சட்டங்கள் மற்றும் கட்டளைகளை வழங்கி விசாரணை செய்வதற்கு சபை நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | மூலம் வரைவொன்றும் சமர்ப்பிக்கப்பட்டதன் பின்னர் தேவையான மீள்கட்டமைப்பு செயற்பாடுகளை மேற்கொள்ள முடியாதிருந்தது. அவ்வாறே 2022.12.20 ஆம் திகதிய அமைச்சரவை தீர்மானத்தின் மூலம் பத்திரிகைகள் பதிவு செய்தல் கட்டணத்தை அதிகரிப்பதற்கு உரிய சபையின் கோரிக்கையும் அமைச்சரவையின் மூலம் நிராகரிக்கப்பட்டிருந்தது. எனினும், 2023.04.06 ஆம் திகதிய கடிதம் மூலம் பிரிவுகளை திருத்த வேண்டிய முறையை காண்பித்து அமைச்சுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | |
| (இ) | 2021 ஆம் ஆண்டில் பொருள் மெய்மெய்யாய்வின் போது இனங்காணப்பட்ட 02 கணனிகளின் பற்றாக்குறை மற்றும் 2022 ஆம் ஆண்டின் போது இனங்காணப்பட்ட 01 கணனியின் பற்றாக்குறை தொடர்பாக நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் உரிய பரிசோதனைகளை நடாத்தி 2023 மார்ச் வரையிலும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | இந்த கணனிகளின் பற்றாக்குறை தொடர்பாக மீண்டும் கண்டறிவதற்காக உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதுடன், இதனை அகற்றுவதற்கு தீர்மானிக்கப்பட்ட கணனிகள் பௌதீக ரீதயில் அகற்றப்பட்ட போதும் கணக்கு ஏடுகளில் அகற்றப்படாதிருந்தா என்பது தொடர்பாக கண்டறியுமாறு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. அவ்வாறே எதிர்காலத்தில் இவ்வாறான நிலைமையின் போது நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |